# பெருநகர சென்னை மாநகராட்சி
# செய்தி வெளியீடு

**செ.வெ.எண்.74** **நாள்: 04.06.2019**

## பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் உள்ள பள்ளிகளில் சுமார் 7 இலட்சம் மாணவ, மாணவியர்கள் தூய்மையான சென்னையை உருவாக்க உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

பெருநகர சென்னை மாநகராட்சி சார்பாக தூய்மை இந்தியா திட்டம் குறித்து பல்வேறு விழிப்புணர்வு முகாம்கள் பள்ளி, கல்லூரிகள், தொழில் நிறுவனங்கள், குடிசைப்பகுதிகள், வணிக வளாகங்கள் மற்றும் பொதுமக்கள் அதிகமாக கூடுமிடங்களில் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்களின் அறிவுறுத்தலின்படி தொடர்ந்து விழிப்புணர்வு நடத்தப்பட்டு வருகின்றன.

மத்திய அரசின் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரத்துறை அமைச்சகம், நாடு முழுவதும் மே மாதம் முதல் ஜுலை மாதம் வரை பள்ளிகளில் தூய்மை இந்தியா குறித்து மாணவ, மாணவியர்களுக்கு தீவிர விழிப்புணர்வு ஏற்படுத்துமாறு அறிவுறுத்தியுள்ளது. அதன்படி பல்வேறு விழிப்புணர்வு முகாம்கள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது.

கோடம்பாக்கம் மண்டலம் சைதாப்பேட்டையில் உள்ள சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் துணை ஆணையாளர் (கல்வி) திரு.பி.குமாரவேல் பாண்டியன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற விழிப்புணர்வு முகாமில் 1500 மாணவியர்கள் மற்றும் 60 ஆசிரியர்கள் பங்குபெற்று தூய்மையான சென்னையை உருவாக்குவதற்கான ''தூய்மை இந்தியா உறுதிமொழியினை'' எடுத்துக் கொண்டனர். இந்நிகழ்ச்சியில் துணை ஆணையர் அவர்கள், தூய்மை இந்தியா திட்டத்தின் முக்கியமான நோக்கங்கள், அதனை செயல்படுத்துவதில் மாணவ, மாணவியர்களின் பங்கு, குப்பைகளை மக்கும் மற்றும் மக்காத குப்பை என்று வகைப்பிரித்து மாநகராட்சி வாகனத்தில் வழங்க வேண்டியதன் முக்கியத்துவம் முதலியன குறித்து மாணவ, மாணவியர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

இதேபோன்று கோடை விடுமுறை முடிந்து பள்ளிகள் திறந்த பிறகு 04.06.2019 அன்று சென்னை மாநகர் முழுவதும் உள்ள மாநகராட்சியின் கீழ் இயங்கும் அனைத்து சென்னை பள்ளிகள் மற்றும் பள்ளி கல்வித்துறை கீழ் இயங்கும் அரசு பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள், மெட்ரிகுலேஷன் பள்ளிகள், ஆதிதிராவிடர் நலப்பள்ளிகள் போன்ற அனைத்து பள்ளிகளிலும் பயிலும் சுமார் 7 லட்சத்திற்கும் அதிகமான மாணவ, மாணவியர்களுக்கு தூய்மை இந்தியா சம்பந்தமாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. அனைத்து பள்ளிகளில் மாணவ, மாணவியர்கள் அனைவரும் ''தூய்மை இந்தியா உறுதிமொழியினை'' எடுத்துக் கொண்டதுடன், முழு தூய்மையான சென்னையை உருவாக்க ஒத்துழைப்போம் என்று உறுதியளித்தனர்.

இந்நிகழ்ச்சியில், பெருநகர சென்னை மாநகராட்சி கல்வி அலுவலர் (பொ) திரு.ஆர்.பாரதிதாசன், மண்டல அலுவலர் திரு.எஸ். நடராஜன், உதவி கல்வி அலுவலர் திரு.வி.முனியன், சுகாதார கல்வி அலுவலர் முனைவர் டி.ஜி. சீனிவாசன் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**